தொகுதி–XVIII கார்த்திகை –2017 இதழ்–3

# சிந்தனை

பதிப்பாசிரியர்

**கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்**

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
2017

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is Refereed Journal, its referees come from university scholars and the national scholarly community.

**Editor** Dr. K. T. Ganeshalingam

**Associate Editor** Prof. K. Arunthavarajah

**Managing Editor** Dr. Mrs. V. Pavaneshan

**Editorial Committee Members**

Mr. S. S. Uthayakumar
Dr. S. Jeevasuthan
Mrs. K. Karuna
Mrs. R. Ragavan
Mr. N. Piratheeparajah
Mr. S. Pathmanaban
Mrs. T. Sayanthan

**Annual Subscription** 1500/- SLR / 15US $

**Price per Copy** 500/- SLR

**Published by** The Faculty of Arts, University of Jaffna, Sri Lanka.

**Printed by** Guru Printers, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

# சமஸ்கிருத காவ்யவியலில் பாமஹரின் வகிபங்கு

சிறிகலா ஜெகநாதன்

## ஆய்வுச் சுருக்கம்

சமஸ்கிருத இலக்கிய விமர்சனக்கலை அதன் ஆரம்பகாலத்திலிருந்து நாடகம், காவ்யம் என்ற இரு பிரிவுகளிலும் வளர்ச்சி கொண்டிருந்தமையை அவதானிக்க கூடியதாகவுள்ளது. நாட்டிய சாஸ்திரத்தின் ஆசிரியரான பரதர் ரசத்துடன் தொடர்புடையதாக நாடகத்தின் கூறுகளை நுணுகி ஆராய்ந்தார். வடமொழி யாப்பிலக்கணம், சொல்லிலக்கணம், பொருள் இலக்கணம் என்பவை கூட வாசிக அபிநயத்துடன் தொடர்புபடுத்தியே கூறப்படுகின்றன. ஆனால் பரதருக்குப் பின் வந்த அலங்கார சாஸ்திர ஆசிரியர்களிற் சிலர் நாடகத்தையும், ரசத்தையும் விடுத்து கவிதையின் இயல்புகளை ஆராய்கின்றனர். முதன் முதலில் கவிதையின் இயல்புகளை ஆராய்ந்தவராக பாமஹர் கூறப்படுகிறார். கவிதையியலில் அலங்காரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றுடன் தொடர்புடையதாக குணங்களையும், தோஷங்களையும் இவர் ஆராய் கிறார். கவிதையில் அலங்கார சாஸ்திரம் என்று அழைப்பதற்கு வழிகோலியவர் பாமஹரே. ரசம், த்வனி போன்ற அம்சங்களையும் இவர் அலங்காரத்துக்குள் அடக்குகிறார்.

திறவுச் சொற்கள் :- அலங்கார சாஸ்திரம், ரசம், வக்ரோக்தி, குணம் மற்றும் மார்க்கம்.

## ஆய்வு நோக்கம்

கவிதையியலின் வளர்ச்சிக்கு பாமஹரின் பங்கு எத்தகையது என்பதை இவ்வாய்வு எடுத்து அவதானிக்கிறது. பாமஹரின் இரு இயல்களில் அலங்காரங்களே பிரதானமாக எடுத்து ஆராயப்படுகின்றன. பாமஹரால் விதந்து கூறப்படும் அலங்காரங்கள் பிற்கால காவ்யவியலாளர்களால் எந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன? அவற்றின் முக்கியத் துவம் யாது? கவிதையியலின் பிற அம்சங் களான ரசம், த்வனி, குணம், ரீதி, போன்றன பற்றி பாமஹர் என்ன கூறுகின்றார் என்பது பற்றி இவ்வாய்வு எடுத்து நோக்குகின்றது.

## ஆய்வின் உள்ளடக்கம்

பாமஹர் காவியங்களை மொழியியல் ரீதியாக சம்ஸ்கிருதம், பிராகிருதம், அபப் பிரம்சம் என மூவகையாகப் பிரிக்கிறார். 'சொல்லும் பொருளும் உடலாய் உள்ளவை காவியம்' என காவியத்திற்கு இலட்சணம் கூறும் பாமஹர் காவியத்தின் வகைகள் என சர்க்க பந்தம், அபிநேயார்த்தம், முக்தகம், கதா, ஆக்யாயிகா என்ற ஐந்து வகைகளைக் கூறுகிறார். சர்க்கபந்தம் என்று கூறப்படுவது மகாகாவியமாகும். முத்தகம் தனிச் செய்யு ளாகும். நாடகம் அபிநேயார்த்தம் என அழைக்கப்பட்டது. அணிகள் காவியத்தை அலங்கரிப்பவை. அணிகள் இல்லாத காவிய மானது அலங்காரமில்லாத பெண்ணைப் போல சோபிக்காது என்று கூறுகிறார் வக்ரோக்தி என்ற சுற்றி வளைத்துக் கூறும் அணியே சிறந்தது தன்மை நவிற்சியில் எத்துணைச் சிறப்புமில்லை அது இயல்பான தென்று கூறுகிறார். சொல்லணி, பொருளணி என முப்பத்தாறு வகை அணிகளைக் கூறி யுள்ளார். உபமாரூபக, நிதர்சனம், விசேக்ஷோக்தி, அப்பிரஸ்துத பிரசம்ஸா, முதலியன இவரால் கூறப்படும் பொருளணி களாகும். யமகம், அனுப்பிராசம், முதலியன சொல்லணிக ளாகும் ரசவத், ஊர்ஜஸ்வின் முதலிய அணிகளுக்குள் ரசத்துக்குரிய இடத்தை யளிக்கிறார். மாதுர்யம், பிரசாதம், ஓஜஸ் முதலிய குணங்களும் இவரால் விதந்து கூறப் படுகின்றன.

## ஆய்வு முறைமை

காவிய அலங்காரத்திலுள்ள அழகியல் அம்சங்களைக் கூறும் இவ்வாய்வு முருகியல் முறை இலக்கியத்திறனாய்வாக அமைகிறது. அழகியல் கூறுகள் பகுக்கப்பட்டு விபரிக்கப் படுகின்றன.

ஆய்வின் பிரதான ஆதாரமாக காவிய லங்காரமும் பிறதுணை ஆதாரங்களாக அழகியல் கோட்பாட்டுடன் தொடர்புடைய நூல்களும் அமைகின்றன.

## ஆய்வு அறிமுகம்

பாமஹர் அலங்காரக் கோட்பாட்டின் ஆரம்ப கர்த்தா என்றமுறையில் அலங்கார தந்திரப் பிரஜாபதி என்று ருய்யகரால் அழைக்கப் பட்டவர். (ஜகந்நாதராஜா. 2002:41) இவரின் காலம் குறித்து அறிஞரிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. கானே என்ற அறிஞர் கி.பி 700-750 க்கும் இடைப்பட்ட காலத்தில் இவர் வாழ்ந்ததாக கூறுவர். (Kane,2015, 427) இவர் தமக்கு முன்பிருந்த ராஜமித்ர, ராமசர்ம, போன்ற காவியவிய லாளர்களை அறிந்திருந்தார். இவரது காவ்ய லங்காரம் ஆறு பரிச்சோதங்கள் அலங் கா ரங்களை எடுத்துக்கூறுகிறது. சுற்றி வளர்த்துக் கூறும் சொல்லே, சுவை பயப்பது என்ற கருத்தினைக்கொண்டவர். இந்த வக்ரோக்தி முறை பிற்காலத்தில் கோட்பாடாக மலர்ச்சி பெற்றது. குந்தகர் என்பவர் வக்ரோக்தி ஜீவிதம் என்ற நூலை இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இயற்றினர். ஒரு கவிஞன் எப்படி, சொற்களையும், பொரு ளையும் தேர்ந்தெடுத்து கவிதை அமைக்க வேண்டும். அவற்றின் அமைப்பிலே என் னென்ன பண்புகள் பொருந்தியிருக்க வேண்டும்? என்னென்ன வழுக்கள் தவிர்க்கப் பட வேண்டும்? என்பவற்றையெல்லாம் எடுத் துக்கூறி கவிஞனுக்கு வழிகாட்டியாய் அமைய வேண்டும் என்ற நோக்கில் தமது காவ்ய லங்காரத்தை பாமஹர் இயற்றின ரெனலாம்.

## கவிதை அல்லது காவ்யம் பற்றிய பாமஹரது கருத்து

சொல்லும் பொருளும் கூடியதுதான் காவ்யம். (சப்தார்த்த சகிதௌ காவ்யம்) என்று காவ்யத்துக்கு வரைவிலக்கணம் கூறுகிறார். (Bhamakar, 1920: 6). 'சப்தார்த்த சரீரம் தாவத் காவ்யம்' என்று சொன்னத் வனிகாரரும் சொல்லும், பொருளும் உடலாகக் கொண்டது. காவ்யம் என்ற கருத்தையுடையவர் (திருஞான சம்பந்தன், 1977:141) மகாகவி காளிதாசர் "சொல்லும், பொருளும் போல் இணை பிரியாதிருக்கும் பார்வதியும், பரமேஸ்வரருமான உலகத்தாய் தந்தையரை வணங்குகிறேன்" என்று ரகு வம்சத் தொடக்கத்தில் கூறியிருக்கிறார் (காளிதாசர், 1975:1). சிவனும், சக்தியும் போல் நித்தியமாய் தொடர்பு கொண்டிருப்பவை சொல்லும், பொருளும் என்பது புலனாகிறது. பெரும் பாலான ஆலங்காரிகர்கள் சொல், பொருள் இரண்டையும் ஒத்தநிலையில் கருதினர். எனினும் காவியத்தில் சொல் லுக்கே முதன்மை கொடுத்து 'ரமணீயார்த் தப்ர திபாதக: சப்த: காவியம் என்று இலக்கணம் கொடுத்தவர் ஜகந்நாத பண்டிதர். (திருஞாசம் பந்தன்.பெ, 1977:140) சுவை பயக்கும் பொருள் வெளியிடும் சொல்லே காவியம் என்று அவர் கண்டார்.

காவியத்தை கத்யம் (உரைநடை), பத்யம் (செய்யுள்) என பாமஹர் இரு வகையாக வகுத்தார். உரைநடையைக் கதை என்றும் ஆக்யாயிகை என்றும் பகுத்து அவற்றின் இலக்கணத்தை தந்திருக்கிறார். (Bhamakar,1920:6) இந்தக்கதை, ஆக்யாயிகா பாகுபாட்டை தண்டி ஏற்றுக்கொள்ளவில்லை. காவியம் கட்டப்பட்ட வகைக்கேற்ப சர்க்க பந்தம் (மகாகாவியம்), அபிநேயார்த்தம் (நாடகம்) கதை, ஆக்யாயிகா, தனிச் செய்யு ளென ஐந்து வகைப்படும் என்று கூறுகிறார். (Bhamakar;1920, 7).மொழி ரீதியாக சமஸ்கிருதம்,

பிராகிருதம், அபப்பிரம்சம் என மூவகையாகப் பிரிக்கிறார். சர்க்க பந்தம் என்று சொல்லப்படுகின்ற மகாகாவியத்தின் இலட்சணங்களை எடுத்துக் கூறுகிறார். "மகா காவ்யம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் பயப்பதாய் இருக்க வேண்டும். நாயகனை முதலில் வர்ணித்து விட்டு அவனுடைய வம்சம், அறிவு முதலியவற்றை எடுத்துரைக்க வேண்டும். எதிரியினால் வதம் செய்யப்படுவதை எடுத்துரைத்தலாகாது. மந்திராலோசனை, தூது, போர்க்கெழுதல் முதலியன கூறப்பட வேண்டும். பல்வேறு ரசங்கள், அலங்காரங்கள் நிறைந்து இருக்க வேண்டும் என எடுத்துரைக்கிறார். (Bhamakar; 1920, 7-8)

கவிஞனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள், ஆற்றல்கள் குறித்தும் பாமஹர் கூறுவர். பிரதிபை எனப்படும் இயல்பான கவிதாசக்தி, வ்யுத்பத்தி என்ற பலபட்ட அறிவு என்ற இரண்டும் கவிஞனுக்கு அவசியமாகும். இலக்கண அறிவு, யாப்பு, சொற்கள் உணர்த்தும் முதன்பொருள், குறிப்புப் பொருள், உலகியலறிவு, தத்துவம் போன்றவற்றை கவிஞன் தெரிந்திருக்க வேண்டும். (Bhamakar; 1920, 3) பிரதிபை என்று சொல்லப் படுகின்ற இயல்பான கவித்துவம் இல்லாதவனது அறிவு செல்வமில்லாதவனது கொடை போலவும், அலியினது ஆயுதத் திறமை போலவும், அறிவிலியின் சுயநம்பிக்கை போலவும் வீணானது என்று கூறுகின்றார். (Bhamakar, 1920:2) சிறந்த காவியங்களைப் படைத்தவர் களின் புகழ் அவர்கள் இறந்த பின்பும் நிலைத்து நிற்கும் (Bhamakar; 1920,2) கலைக்கும் புருஷார்த்தங்கள் என்று சொல்லப்படும் வாழ்க்கையின் பயனுக்குமுள்ள தொடர்பை பின்வருமாறு எடுத்துரைக்கிறார் பாமஹர்.

"தர்மார்த்த காமமோக்ஷேசு வைசக் ஷண்யம் கலாசு ச:.ப்ரீதிம் கரோதி கீர்த்திம் ச சாது காவ்ய நிபந்தனம்" (Bhamakar; 1920, 1)

இங்கே கூறப்பட்ட பயன்களுள் புகழ் நூலாசிரியனுக்கும் பிற பயன்கள் ஆசிரியனுக்கும் நூலைப் பயில்வோனுக்கும் உரியன வாகும்.

## அலங்காரங்கள்

"பெண்ணின் முகம் ஒளி உடைத்தாயிருந்தாலும் அணிகளின்றி அழகுறுவதில்லை" என்று கூறி பாமஹர் அலங்காரங்களைச் சிறப்பிக்கின்றார். (Bhamakar,1920:5). அதிசயோக்தி, அர்த்தாந் தரந்யாசம், அநந்வயம், அபஹ்னுதி, அப்பிரஸ்துத பிரசம்ஸா, ஆக்ஷேப, ஆஸி, உத்பிரேக்ஷை, உத்பிரேக்ஷாவயவம், உதாத்த, உபமா, உபமாரூப, உபமேயோபமா, துல்யாயோகிதம் தீபகம், நிதர்சனம், பரி விருத்தி, பர்யாயோக்தம், பிரதிவஸ்தூபமா, பாவிகம், யதாசாங்கியம், ரூபகம், வக்ரோக்தி, விபாவனா, விசேக்ஷோக்தி, விரோதம், வ்யதிரேகம், வ்யாஜஸ்துதி, சமா சோக்தி, சமாஹிதம், சசந்தேஹ, சஹோக்தி, சம்சிருக்ஷ்டி, ஸ்வபா வோக்தி ரஸவத், பிரேயஸ், ஊர்ஜஸ்வின் முதலிய பொருளணிகளை எடுத்துக் கூறுகிறார். யமகம், அநுப்ராசம், லாடாநுப் ராசம் முதலிய மூன்று சொல்லணிகள் கூறப்படுகின்றன. ஸ்வபா வோக்தி, ஹேது, லேச, சூக்சும முதலிய அணிகளை அவர் குறிப்பிடுகிறாரெனினும் அவற்றை ஏற்கவில்லை. வக்ரோக்தி என்ற சுற்றி கூறும் முறை அவ்வணிகளில் இல்லாமையால் அவற்றை அவர் ஏற்கவில்லை. (Kane; 2015, 82)

தண்டியாசிரியர் காவ்யதர்சத்தில் கூறும் ஸ்வபாவோக்தி என்ற அணியை பாமஹர் அணியாக ஏற்கவில்லை.

"ஞாயிறு மறைந்தது, நிலவு உதித்தது, பறவைகள் கூடுகட்குச் சென்றன." என்று கூறவதில் கவிச்சுவையில்லை. செய்தி மட்டுமேயுள்ளது என்று கூறுவர். (Bhamakar;50) ஆயினும் தண்டியின் காவ்யதர்சம் ஸ்வபாவோக்த்ஸ சஜாதிஸ் சேத் யாத்யா சாலங்

கிருதிர் யதா/காந்தம் பவதி சர்வஸ்ய லோகயாத்ரானுவர்த்தினஹ//என்று இயல்பு படப் பேசுவதிலும் அழகு இருப்பதாவும், உலக வழக்குக்கு ஏற்ப அமைவதில் ஒளி மிகும் என்றும், கூறுவர். (Dandin 1980:59) சுற்றி வளைத்துக்கூறும் வக்ரோக்தி எல்லா அணிகளிலும் உயிரோட்டம் போன்று இருப் பதை 'சைக்ஷா சர்வைவ வக்ரோக்திஹி அநயார்த்தோ விபாவ்யதே.' என்று தெளிவு படுத்துகிறார். (Bhamakar: 49) அதிசயோக்தி அணியில் வக்ரோக்தியின் தன்மையை எடுத்து விளக்குகிறார். சாதாணமாக ஒருவன் சப்தபர்ண மரங்களில் மலர்கள் வெளுப்பாக இருக்கின்றன என்று சொல்வதை கவிகுணா திசயம் தோன்றும்படி பின்வருமாறு கூறு வான். "பௌர்ணமி நிலவு பால் பொழிகிறது. சப்தபர்ண மரங்களும் அவற்றின் இலைகளும் மட்டுமே பசுமையாகத் தெரிகின்றன. பூக்கள் எவற்றையுமே காணவில்லை என்று தோன் றும்படி வெண்ணிலவும் வெண்மையான மரங் களும் பிரித்தறிய முடியாதபடி காணப்படு கின்றன. மலர்கள் இல்லை என்று கூறிவிட முடியாது. அம் மரத்தைச்சுற்றி ஆங்காங்கு கருவண்டுகள் அம்மலரிலுள்ள தேனைப் பருக வட்டமிடுகின்றன. அங்கே வெண் மலர்கள் இருப்பது அறியப்படுகிறது.

ஸ்வபுகூஷ்பச்சவிஹாரிண்யா சந்திர பாஸா திரோஹிதா! அந்வமீயந்த ப்ருங் காலிவாசா சப்தச்சத த்ருமா (Bhamakar;48)

மேற்படி செய்யுளில் வக்ரோக்திப்பண்பு காணப்படுகிறது. ஆனந்தவாத்தனர் த்வன்யா லோகத்தில் த்வனிக் கோட்பாட்டை நன்கு நிலை நிறுத்தியது போல் இவர் வக்ரோக்திக் கோட்பாட்டை தெளிவாக வரையறை செய்து கூறவில்லை. இதனால் இவரால் வக்ரோக்திக் கோட்பாடு முன்னரேயே அறியப்பட்டிருக்க வேண்டும். (Chandra Pandey; 2008,495)

பரதர் உபமை,ரூபகம், தீபகம், யமகம் என்ற நான்கு அணிகளைக் குறிப்பிட பாமஹர், இந்த நான்கு அணிகளுடன் அநுப்ராசம் என்ற அணியையும் தமக்கு முன் பிருந்த காவியவியலாளர்கள் கூறியதாகக் கூறுவர். (Bhamakar;22)

தொழில், இடம், காலம் என்ற ரீதியில் உபமேயத்துடன் உபமானம் ஏதோ ஒரு சிறிதுவகையில் ஒத்திருத்தல் உவமானத்தின் இலட்சணமாகும் (Bhamakar;31). ஒரு பொரு ளுக்கு பிறிதொரு பொருளுடன் எல்லா வகை யிலும் ஒப்புமை இருப்பதில்லை. ஏதாவ தொரு வகையில் ஒப்புமை கொண்டிருத்தல் பற்றியே உவமை கூறப்படுகிறது என்று உவமை பற்றிக்கூறும் பாமஹர் பரிபூரண மண்டலம் உடைய சந்திரன் எங்கே? ஒளி யில்லாத காதலியின் முகம் எங்கே? ஏதோ ஒருவகையில் சிறிது ஒளி இருப்பதைக் கொண்டு முகம் சந்திரனுக்கு உவமிக்கப் படுகிறது என்று கூறுவர். (Bhamakar.32) யதா, இவ போன்ற உவமையுருபுகள் மறைந்தும், மறையாதும் வரும் உவமையணிகளை எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

'தந்வீ ஸ்யாமா லதா யதா என்று (ஸ்யாமா கொடி போன்ற இடையுடையவள் என்று கூறும்போது உவமையுருபு விரிகின் றது). (Bhamakar;32) சசாங்கவதனா (சந்திர முகமுடையவன்) என்று கூறும்போது உருபு தொக்கு நிற்கும் (Bhamakar; 32) உவமையுருபு தொக்கு நிற்றல் லுப்தோபமா எனப்பட்டது. பல்வேறு கருத்துக்களைத்தரும். சொற்கள் எல்லாம் ஒரு வசனத்தில் பொருந்தி வருதல் தீபகம் எனப்பட்டது. (Bharatamuni;1894,176).

தீபகவணியை விளக்கணி என தமிழில் அழைப்பர். ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கு பலவிடங்களில் சென்று விளக்குதல் போல் இவ்வணியும் கவிதையில் ஓரிடத்தில் நின்று பலவிடத்தும் பொருள் விளக்கும் தன்மையுடையது. ஆதி, மத்யம், அந்தம் என்ற மூன்றுவகைத் தீபகங்களைப் பாமஹர் குறிப்பிட (Bhamakar;30) காவ்யதர்சத்தில்

தண்டி பதினேழுவகைத் தீபகங்களைக் குறிப்பர்.

அநுப்ராசம், யமகம் என்ற சொல்லணி களையும் பாமஹர் குறிப்பிடுவர்.

எழுத்து திரும்பவும் வருதல் அநுப்ரா சமாகும். சொல் மீண்டும் வருதல் யமக மாகும். லாடாநுப்ரராசம், க்ராம்ய நுப்ராசம் என்று இருவகை அநுப்ராசங்களையும், ஐந்து வகை யமகங்களையும் காவ்யலங் காரத்தில் காணலாம்.

## ரசம், ரீதி, குணம், ஔசித்யம், தோஷஷங்கள் பற்றிப் பாமஹர்

அலங்காரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த பாமஹர் பிரேயஸ், ரஸவத், ஊர்ஜஸ்வின் போன்ற அலங்காரங்களுக்குள் ரஸத்தையும் உள்ளடக்குகிறார். ரஸவத் என்ற அலங்காரத்தில் சிருங்காரரசம் உள்ள டங்குவதை எடுத்துக்காட்டுகிறார். பரதரால் சிலேடை, பிரசாதம், சமதா, சமாதி, மாதுர்யம், ஓஜஸ், சௌகுமார்யம், அர்த்தவ் யக்தி, உதாரம், காந்தி என்ற பத்துக் குணங்கள் கூறப்பட்டுள்ளன. இப்பத்துக் குணங்களையும் தண்டி ஏற்றுக்கொள்கிறார். பாமஹர் பிரசாதம், மாதுர்யம், ஓஜஸ் என்ற மூன்று குணங்களை மட்டும் குறிப்பிடுவர். பரதரால் குணங்களுக்கு கொடுத்த வரை விலக்கணங்கள் பிற்கால காவியவியலாளர் களால் மாறுபட்டு கூறப்படுகிறது. மாதுர் யகுணம் பற்றிக் கூறுகையில் பரதர் பலமுறை கேட்கினும் சலிப்பை உண்டாக்காது எதுவோ அதுதான் இனிமை என்கிறார். (Bharatamuni;1894,176) செவிக்கினிமையும், மிக்க சமாசப் பிரயோ கமும் இல்லாத செய்யுள் மாதுர்யம் என்பது பாமஹரது விளக்கமாகும். (Bhamakar; 21-22) ஓஜஸ் பல தொகைச் சொற்கள் கூடியதும், அநுஸ் வரத்தையும் கொண்டதாக பரதர் கூற (Bharatamuni;1894,176) பாமஹர் ஓஜஸ் வலியு டையது என்றும் தெளிவையும், இனிமை யையும் பெறாதது என்று கூறுவர். (Bhamakar;22) பிரசாதம், மாதுர்யம் முதலிய வற்றில் சொற்றொடர் மிகுதியாகவும் வரும். பரதர் தண்டி போன்று வைதர்ப்ப மார்க்கம் சிறந்தது என்றோ கௌட மார்க்கம் தாழ்ந்தது என்றோ முத்திரை குத்தவில்லை. இதனால் மார்க்கங் களுக்குரியனவாக சொல்லப்பட்ட குணங் களையும் விதந்து கூறவில்லை. குணங்களை நெறியுடன் தொடர்புபடுத்தாமல் தொடர் மொழிகளின் மிகுதி (கௌடம்), மிகுதி யின்மை வைதர்ப்பம் என்ற அடிப்படையில் கூறுவார்.

த்வனியைப் பற்றி பாமஹர் அறிந்தி ருக்காவிடினும் அதுபோல் ஒன்றை ஓரளவு அறிந்திருந்தார் என்பதை பர்யாயோக்தி, சமாசோக்தி, வியாஜஸ்துதி அப்பிரஸ்துத பிரசம்சை போன்ற அலங்காரங்களை விளக் கும்போது உணரக்கூடியதாயுள்ளது.

ஔசித்யம் என்ற பொருத்தப்பாடு குறித்து நேரிடையாக எதுவும் கூறாவிட்டாலும் அதன் தத்துவத்தையுணர்ந்து சில குறிப்புக் களைத் தந்துள்ளார். பாத்திரப் படைப்பை பற்றிக் கூறுமிடத்தும், குணம், குறிப்புக் களைப் பற்றிய விமர்சனத்திலும், உவமை முதலியவற்றின் குறைபாடுகளை சுட்டு மிடத்தும் ஔசித்யம் குறித்த சிந்தனை களை கூறியுள்ளார். மேகம், தென்றல், வண்டு, கிளி முதலியன தூது செல்வது இயல் பன்று எனினும் இவை காதல் மயக்கத்தால் பீடிக் கப்பட்ட தலைவன் கூறியதாக கொள்ள வேண்டும்.(Bhamakar;15) மாலை தொடுக்கும் போது மலர்களுக்கிடையில் பச்சிலை கூட எழில் பெறுவது போல், சிறந்த சொற்களுக் கிடையில் சாதாரண சொற்கள் கூட எழில் பெறும் சிறிய பிழைகள் கூட சிறந்தவரைச் சேரும் போது அழகிய பெண்களின் கண்களில் தீட்டிய மைபோல் எழிலுறும் என்று கூறுகிறார். (Bhamakar; 20)

நண்பகலில் பரிவட்டம் சூழ்ந்த சூரியன் போல் எனும் உவமையை நண்பகலில்

பரிவட்டம் உருவாகாது என்று கூறி இதில் உவமைப் பொருத்தமில்லை என்கிறார். (Bhamakar; 37)

காவ்யதோக்ஷங்கள் பற்றிக் கூறுகையில் இடம், காலம், நியாயம், உலகவழக்கு, மறை என்பவற்றுக்கமைய முரண்பாடின்றி சித்தரித்தல் வேண்டும் என்று கூறுவர். மலைய மலைச் சந்தனத்தை விந்திய மலையில் வர்ணிக்ககூடாதென்றும் இளவேனிற் காலத்தில் பூக்கும் மாம்பூவை மழைக்காலத்தில் வர்ணித்தல் குற்றம் என்றும் கூறுவர். (Bhamakar; 82)

நிகழ்ச்சிகளை யுக்திக்குப் பொருத்தமான வகையில் சித்தரிக்க வேண்டும் என்றும் கற்பனையே எனினும் நம்புதற்கேற்றபடி அமைய வேண்டும் என்றும் கூறுவர்.

## முடிவுரை

சமஸ்கிருத காவ்யவியலில் நாடகத்தையும் ரசத்தையும் விடுத்து கவிதையியலின் இயல்புகளை முதலில் ஆராய்ந்தவர் பாமஹர் அலங்காரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றுடன் தொடர்புடையதாக ரசங்களையும், குணங்கள், தோக்ஷங்கள், போன்ற அழகியல் அம்சங்களையும் ஆராய்கிறார். த்வனி, ஔசித்யம் போன்ற காவியவியற் கோட்பாட்டு அம்சங்களையும் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

## Reference


1. Bhamakar, (2015), Kavyalankara, *Motilal Banarsidas,* Delhi.
2. Bharatamuni, (1894),*NatyaSastra*, Nirnayasagar press, Bombay.
3. ஜகந்நாதராஜா. மு, (2004), ஔசித்ய விசாரசர்ச்சா, ராஜபாளையம், மதுரை.
4. Kane, P.V,(2015) *History of Sanskrit Poetics*, Motilal Banarsides,Delhi.
5. காளிதாசர், (1915) ரகுவம்சமகா காவ்யம், தலிட்டில் பளவர் கம்பெனி, மதராஸ்.
6. Kanti Chandra Bandey, (2008) *Comparative Aesthetics,* Vol. I, Chowkhamba Sanskrit Series. Varanasi.
7. திருஞானசம்பந்தன். பெ, (1977) , இந்திய எழிற்கலை, சென்னை.